NIRU TUITION CENTRE
Kondavil.
A/L 87
பௌதிகம்
காந்தப்புலமும்
ஒட்டமின்னியலும்
சனி 10-00 – 11-00
A/L 88
பொறியியலும்
நீர்நிலையியலும்
சனி, 9 — 10 மணி
ஆசிரியர்:
திரு. சௌந்தி B. Sc (Hons.)
ஆரம்பம்: 10-01-87

Registered as a Newspaper

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 24 உ. வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமாதி அவ் பிறை 7 (08 01-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 37

NIRU TUITION CENTRE
Kondavil.
A/L 87
இரசாயனம்
கைத்தொழில் இரசாயனம்
நேரம்:
சனி, ஞாயிறு 7 – 8
A/L 88
அசேதன இரசாயனம்
நேரம்: சனி, ஞாயிறு 8 – 9
ஆசிரியர்:
திரு. செல்வா, B. Sc: (Hons.)
ஆரம்பம்: 10-01-87
சனி 8-00 — 9-00

யாழ். நகரில் 4 மணிநேர மும்முனைத் தாக்குதல்கள்

ஷெல் அடி; ஹெலிச்சூடு; கணவன் - மனைவி பலி

பத்துக்கு மேற்பட்டோர் காயம்

– கே. இரத்தினராஜசிங்கம், எம். பேரின்பநாயகம். –

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்ப்பாண நகரத்தில் அரசாங்க ஆயுதப்படையினர் நான்கு மணி நேரம் மும்முனைத் தாக்குதல்கள் நடத்தினர்.

கோட்டை முகாமில் இருந்து ஷெல் அடி. வானத்திலிருந்து ஹெலிச் சூடு. கடலில் இருந்தும் துப்பாக்கித் தாக்குதல் இவை யாவும் பொம்மர்களும், சீ. பிளேனும் ரோந்து புரிய சமகாலத்தில் நடத்தப்பட்டன.

அவற்றின் விளைவாக யாழ்ப்பாண நகரம் அல்லோலகல்லோலப்பட்டது. பதறியது. பின்னர் அடங்கியது.

புதுவருடத்தில் முதற் தடவையாக படையினர் நடத்திய "கும்மாளத்தில்" கணவனும் மனைவியுமாக இருவர் பலியானார்கள். பத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஷெல் குண்டு வீச்சினால் பல வீடுகள், கடைகள் சேதமடைந்தன. சில தீப்பிடித்துக்கொண்டன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வழமையைவிடக் குறைந்த எண்ணிக்கையினரே நகருக்கு வந்திருந்தனர், எனினும் அவர்கள் தாக்குதல்கள் தொடங்கியதும் சிதறி ஓடினர். பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக் கொண்டனர். கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டன.

நேற்றும் பிற்பகல் சரியாக 2.20 மணிக்கு யாழ் கோட்டை முகாமில் இருந்து ஷெல் தக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று ஷெல்க்குண்டுகள் விழுந்த பின்னர் இரண்டு பொம்மர்களும், ஹெலிக் கொப்டர் ஒன்றும் வட்டமிட்டு ரோந்து திரிந்தன.

'பொம்மர்'கள் தாக்குதலை நடத்தவில்லை, எனினும் அவற்றின்மீது போராளிகள் 50 கலிபர் தாக்குதல்களை நடத்தினர்.

ஹெலிக்கொப்டர் சரமாரியாகத் துப்பாக்கிப்

(4-ம்பக்கம் பார்க்க)

சிப்பாய்களை எதிர்த்து புலிகள் கடும் சமர்

யாழ்ப்பாணம், ஜன. 8

முப்படைத் தாக்குதலுடன் வெளியேற முயன்ற சிப்பாய்களை நோக்கி விடுதலைப் புலிகள் நேற்றுக் கடும் சமர் நடத்தினர்.

யாழ். கோட்டை முகாமில் இருந்தும் பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்தும் வெளியேற முயன்ற சிப்பாய்களை நோக்கியே புலிகள் தாக்குதல் நடத்தினர்.

நேற்று பகல் சரியாக 2-20 மணிக்கு படையினர் யாழ் நகரைநோக்கி ஆகாயத் தாக்குதல்களும், தரைத் தாக்குதல்களும் கடல் தாக்குதல்களும் மேற்கொண்டனர்.

இதேவேளை பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்து வெளியேறிய நூற்றுக்கு மேற்பட்ட

(4ம் பக்கம் பார்க்க)

யாழ்நகர் இருளில்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ் நகரின் சில பகுதிகளில் மின்சார வயர்களும், தொலைபேசி வயர்களும் ஷெல் தாக்குதலினால் அறுந்து விழுந்து கிடந்தன.

அதனால் நகரின் அநேக பகுதிகள் நேற்று இரவு இருளில் மூழ்கி இருந்தன.

தொலைபேசிச் சேவைகளும் பாதிக்கப்பட்டன. (இ-10)

இறந்த இருவர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன 8

நேற்றைய ஷெல் தாக்குதலின்போது கொல்லப்பட்ட குடும்பஸ்தர்களின் பெயர் விவரம் வருமாறு:

எஸ். வேலாயுதபிள்ளை (55 வயது) கணவன், வேலாயுதபிள்ளை சிந்தாமணி (50 வயது) மனைவி

இவர்கள் கொட்டடி

(4-ம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் இருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன 7

யாழ் நகரில் நேற்று நடைபெற்ற படையினருடனான நேரடி மோதலில் விடுதலைப் புலிகளின் யாழ் முஸ்லிம் பிரதேசப் பொறுப்பாளர் பாறுக் (கனிபா வயது 22 அக்கரைப்பற்று வீரமரணமடைந்தார்.

இவருடன் சேர்ந்து மற்றைய போராளியான சிலனும் சிவக்குமார், (நாவாந்துறை) வீரமரணமடைந்தார்.

இவர்கள் இருவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர். (இ-10)

காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ்நகரில் நேற்று இடம்பெற்ற ஷெல்தாக்குதலில் காயமடைந்தோர் விவரம்:

துரைராசா யோகேஸ்வரன் (17 வயது), யாழ்ப்பாணம், சின்னத்தம்பி குமார் (21வயது) கோப்பாய், முத்துலிங்கம் செல்வராசா (25வயது) சரவணை, ஏ.ஆர். சூரன் (32 வயது) மன்னார், நாகேசு நடராசா (36 வயது) ஊர்காவற்றுறை எஸ். சிற்றம்பலம் (36 வயது) இரணைமடு, தங்கன்ராஜா (36 வயது) மானிப்பாய், பி. ஆனந் (37வயது)யாழ்ப்பாணம் கோபாலதாஸ்(23வயது) யாழ்ப்பாணம், தேவரத்தினம் (38வயது) யாழ்ப்பாணம், தி. வீரகத்தி (65 வயது) யாழ்ப்பாணம். (இ-10)

சின்னுபின்னப்பட்ட சடலத்தை சாக்கிலே சுற்றிஎடுத்துவந்தனர்!

யாழ்ப்பாணம், ஜன 8

ஷெல் தாக்குதலில் சிதைவுற்று மரணமான வேலாயுதபிள்ளையின் சடலம் சாக்கினால் சுற்றப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டது அந்தளவுக்கு அது சின்னுபின்னப்பட்டிருந்தது.

வேலாயுதபிள்ளையின் சடலத்துடன் அவரது மனைவி சிந்தாமணியின் சடலமும் கொண்டுவரப்பட்டது. அந்தச் சடலமும் ஓரளவு சிதைந்த நிலையிலேயே இருந்தது.

வேலாயுதபிள்ளையும் சிந்தாமணியும் தம்பதியர் அவர்களுக்கு நான்கு பிள்ளைகள். இருவர் வெளிநாட்டில்.

தம்பதியர் கொட்டடிச் சந்தியில் உள்ள அவர்களது வீட்டில் இருந்தபோதே ஷெல் விழுந்து மரணமானார்கள் (இ-10)

மண்மூடை அரணுக்குள் பதுங்கி இருந்தவர் வெளியேவர ஷெல்விழுந்தது

யாழ்ப்பாணம், ஜன. 8

ஷெல் தாக்குதல் முடிந்து விட்டது என நினைத்து வெளியே வந்தபோது மீண்டும் பஸ் நிலையப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் எனக்குக் காயம் ஏற்பட்டது.

நேற்றைய ஷெல் தாக்குதலின்போது காயமடைந்த சின்னத்தம்பி குமார் இவ்வாறு தெரிவித்தார்.

இவருக்கு தலையிலும் கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மெக்கானிக்காக கடமையாற்றும் இவர் மேலும் சொன்னதாவது.

யாழ் நகரில் ஷெல் தாக்குதல் தொடங்கியபோது நான் பயத்தினால் ஓடிச்சென்று

(4ஆம் பக்கம் பார்க்க)

பஸ் மிதிபலகையில் பயணம் செய்தவரும் காயமடைந்தார்

யாழ்ப்பாணம், ஜன, 8

பஸ்ஸின் மிதி பலகையில் நின்று வந்து கொண்டிருந்தேன் அப்போது ஐம்பது யார் தூரத்துக்கு அப்பால் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. இதனால் எனக்கு காயம் ஏற்பட்டது.

நேற்றைய ஷெல் தாக்குதலின் போது காயங்களுடன் மயிரிழையில் தப்பிய பஸ் பிரயாணிகளில் ஒருவரான நாகேசு நடராசா இவ்வாறு தெரிவித்தார்.

இவருக்கு காலிலும் கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன.

இவர் மேலும் உதயனுக்குச் சொன்னதாவது:

அராலித்துறை நோக்கி ஐம்பதுக்கும் மேற்பட்ட பயணிகளுடன் எமது பஸ் கொட்டடி வீதியூடாகச் சென்று கொண்டிருந்தது லேடன் காமன்ஸ்க்கு அருகாமையில்

[4-ம் பக்கம் பார்க்க)

கூரையைத்துளைத்து வந்த குண்டு

யாழ்ப்பாணம், ஜன. 8

மத்தியானச் சாப்பாட்டை முடித்து விட்டு பிள்ளைகளுடன் இருந்து கதைத்துக் கொண்டிருந்த போது கூரையைத் துளைத்து வந்த குண்டு ஒன்று எனது நாடியைத் தாக்கியது.

நேற்று ஹெலிகொப்டர் தாக்குதலுக்கு இலக்கான தங்கன் ராஜா (30 வயது) இப்படிச் சொன்னார்.

மானிப்பாய் வீதியில் வசிக்கும் இவர் மேலும் சொன்னதாவது:-

மத்தியானம் அளவில் ஹெலிக் கொப்டர், பொம்மர்கள் நகரைச் சுற்றி வட்டமிட்டன.

அப்போது நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். சாப்பாட்டை முடித்துக்கொண்டு

(4-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி

வருட ஆரம்பத்திலேயே தங்கடை அமர்க்களம் எப்படி இருக்கும் என்டு ஒரு சைகை காட்டப் பார்த்தினமோ...!

நகரில் வெளிநாட்டு செய்தியாளர்

யாழ்ப்பாணம் ஜன. 8

நேற்று யாழ் நகரில் ஷெல் தாக்குதல்களும் ஹெலிக்கொப்டர் தாக்குதல்களும் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது வெளிநாட்டுச் செய்தியாளர்கள் இருவரும் இருந்

(4-ம் பக்கம் பார்க்க)

★ வட பகுதி நிலைமை குறித்து விவாதம்

கொழும்பு, ஜன. 8

வட பகுதி நிலைமை குறித்து இன்று காலை இரண்டு மணி நேர விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்காவின் கோரிக்கையை ஏற்று இவ் விவாதத்தை நடத்த சபா

(4-ம் பக்கம் பார்க்க)

எரிபொருள் தடையை நீக்க கோரிக்கை

கொழும்பு, ஜன 8

வடபகுதிமீது விதிக்கப்பட்ட எரிபொருள் தடையை நீக்கும்படி கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர்கள் பலர் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச்சந்தித்துக் கோரியுள்ளனர்.

கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

பிரிட்டன், ஆஸ்திரே

(4-ம் பக்கம் பார்க்க)

மண்ணெண்ணெய் கொண்டுவர அனுமதி?

கொழும்பு, ஜன. 8

வடபகுதிக்கு மண்ணெண்ணெயைக் கொண்டுபோக அனுமதிப்பதுபற்றி;

நேற்றுமாலை நடந்த தேசியப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் முன்கண்ட விஷயம் பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தலைமையில் இக்கூட்டம் நடந்தது.

வடபகுதி எரிபொருள் தடை, அதனால் எழுந்

(4-ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

8 - 01—1987
வியாழக்கிழமை
சுபநேரம்:
8 02 முதல் 9.32 வரை
ராகுகாலம்:
2.02 முதல் 3.32 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
நவமி முன்னிரவு
10 30 வரை

யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிள் கொண்டு செல்லவும் தடை!

திருப்பி அனுபபப்பட்டன

யாழ்ப்பாணம் ஜன. 8

யாழ்ப்பாணத்துக்கு மோட்டார் சைக்கிள்கள் கொண்டு செல்வதற்கும் அரசு தடைவிதித்துள்ளது.

நேற்று நான்கு லொறிகளில் வந்த மோட்டார் சைக்கிள்கள் வவுனியாவில் மறிக்கப்பட்டு மீண்டும் கொழும்பு நோக்கித் திருப்பி அனுப்பப்பட்டன.

சுமார் 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவரை நான்கு லொறிகளில் கொண்டு வரப்பட்ட இந்த மோட்டார் சைக்கிள்களை வவுனியா ஏ. எஸ். பி. தடுத்து வைத்து நான்கு லொறிகளையும்கொழும்பு திரும்புமாறு உத்தரவிட்டார்.

இதனை அடுத்து லொறிச் சாரதிகள் வவுனியா மாவட்ட பிரசைகள் குழுவிடம்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திய அரசு விலகுமா?

கொழும்பு, ஜன. 8

மத்தியஸ்தர் நிலையில் இருந்து இந்திய அரசு விலகிக்கொள்ளப் போகிறதா?

கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் இக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது:

அண்மையில் கொழும்பில் உள்ள ரஷ்ய, பிரிட்டிஷ், அமெரிக்க, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் சோஷலிச நாடுகளின் தூதர்களை இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் தனித் தனியே சந்தித்து

(4-ம் பக்கம் பார்க்க)

சேதமடைந்த வீடுகள், கடைகள்

யாழ்ப்பாணம், ஜன. 8

நேற்றைய ஷெல் தாக்குதலில் பல வீடுகள், கடைகள் என்பன சேதமடைந்தன.

சிலவற்றில் தீப்பிடித்து பெரிய அளவில் சேதமுற்ற சில வீடுகள், கடைகள் விவரம் வருமாறு:-

★ யாழ் விக்ரோரியா வீதியில் த யேசுதாசன், யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி கதிர்காமர் ஆசிர்யோரின் வீடுகள்.

★ யாழ் பஸ் நிலையம் பகுதியில் விமாலி, பரீஸ் ரெக்ஸ்ரைல்ஸ், உட்பட சில கடைகள்.

★ கொட்டடிச் சந்தியில் உள்ள சில வீடுகள், கடைகள்.

★ குருநகர் கடற்கரை வீதியில் உள்ள இரண்டு கடைகள்.

ஷெல் விழுந்த போது சில இடங்களில் கட்டடங்கள் தீப்பிடித்தன. (இ-10)

எரிபொருள் தடை இந்திய அமைச்சரவை அரசியல் விவகாரக்குழு ஆய்வு

புதுடில்லி, ஜன. 7

எரிபொருள் தடையால் இலங்கையில் தமிழருக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை குறித்து இந்திய அமைச்சரவை அரசியல் விவகார உப கமிட்டி இன்று புதுடில்லியில் ஆராய்ந்தது.

பிரதமர் ராஜீவ் காந்திக்கு அடுத்தபடியாக அமைச்சரவையில் உள்ள இரேஷ்ட அமைச்சர் திரு. பி வி. நரசிம்மராவ் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

தமிழர் பிரச்சினை மோசமடைந்து வருவது குறித்து இக் கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது.

விடுமுறையை அந்தமான் தீவுகளில் கழித்து வரும் பிரதமர் காந்தி புதுடில்லி திரும்பியதும், அமைச்சரவை உபகுழு மீண்டும் கூடி இலங்கைத் தமிழர் பிரச்சினையை ஆராயும் என்று புதுடில்லியில் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

ஆனையிறவில் ஆயர் குழுவுக்கு ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம், ஜன. 8

கத்தோலிக்க திருச்சபையின் அதிமேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னாண்டோ தலைமையில் யாழ் வந்த ஆயர் குழுவினருக்கு ஆனையிறவில் பெரும் ஆச்சரியம் காத்திருந்தது.

சிப்பாய்களின் முகாமும் விடுதலைப்புலிகளின் சென்றியும் மிகக் குறுகிய தூர இடைவெளியில் இருந்ததே இதற்குக் காரணம்.

ஆனையிறவு முகாமில் அவர்களை சிப்பாய்கள் அழைத்துச்சென்று இராணுவப் பயிற்சி, இலக்குகள், ஆயுதங்கள் என்பனவற்றைக் காட்டி பெருமைப் பட்டனராம்.

அதைத் தொடர்ந்து முகாமை விட்டு வெளிவந்த ஆயர்குழுவை ஆனையிறவு முகாமுக்கு அருகில் சுமார் 100 யார் தூரத்தில் வைத்து போராளிகள் வரவேற்றனர். போராளிகளின் சென்றியைப்பார்த்து குழுவினர் அதிசயித்தனர். (இ-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

★★★★★★★★★
★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரங்கள் ★
★★★★★★★★★

தேவை

அலுவலகப் பணியாளர் (Peon) தேவை. தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விளம்பர எண்: 44, மே/பா. உதயன், யாழ்ப்பாணம்.

பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு படப்பிடிப்பாளர் தேவை. படப்பிடிப்புடன் சம்பந்தப்பட்ட தொழில் நுட்பம் தெரிந்தவராக இருக்க வேண்டும். விளம்பரஎண்: 42, மே/பா. உதயன், த. பெ. எண்; 23, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு

பழைய பத்திரிகைகள் விற்பனைக்குண்டு எழுத்துமூலம் விலைகள் கோரப்படுகின்றன. விளம்பரதாரர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை:

சுண்ணாம்புப் படிவங்கள் அருகி வருகின்றன

கடல்ஊரி, சிப்பி போன்றவற்றை பயன்படுத்துமாறு ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஜன. 8 காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலைக்காக சுண்ணாம்புக் கல் அகழ்ந்து எடுப்பதால் வடபகுதியில் சுண்ணாம்புப் படிவங்கள் குறைந்து வருகின்றன என்று நில அகழ்வுத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

சிமெந்தின் முக்கிய மூலப் பொருளான சுண்ணாம்புக்கல்லை, கீரிமலைப் பகுதியில் தொழிற்சாலையினர் அகழ்ந்து எடுக்கின்றனர்.

சிமெந்து உற்பத்தி அதிகரிப்பதால் சுண்ணாம்புப் படிவங்கள் குறைகின்றன.

இதனால் கடல் ஊரி, சிப்பி போன்றவற்றை சுண்ணாம்புக்கற்களுக்குப் பதிலாக பாவிக்கும்படி நில அகழ்வுத் திணைக்களம் தொழிற்சாலை நிர்வாகத்தைக் கேட்டுள்ளது. (இ-5)

குடும்பத்தில் ஒருவராவது அங்கம் வகிக்க வேண்டும்

உரும்பராய் - ஊரெழு வரியிறுப்பாளர் சங்கக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜன. 8 ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது கட்டாயம் வரியிறுப்பாளர் சங்கத்தில் அங்கத்தவராக இருக்க வேண்டும். பகுதிக்கு ஒருவராவது பிரதிநிதியாக இருந்து அவர்களின் குறைகளைத் தீர்க்க சங்கத்திற்கு உதவவேண்டும்.

உரும்பராய் ஊரெழு வரியிறுப்பாளர் சங்க பொதுக் கூட்டத்தில் சங்க போஷகர் திரு க. நாகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சங்கத்தலைவர் டாக்டர் கா. தாமோதரம்பிள்ளை தமதுரையில், அவ்வப்பொழுது திடீர் திடீரென நின்று போகும் மின்சார சீர்குலைவைப் போக்கவும், வீதிகளில் உள்ள பள்ளங்கள், குழிகளைத் திருத்தவும் புனரமைக்கப்பட்ட ஊரெழு - உரும்பராய் வரியிறுப்பாளர் சங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார்.

திரு. நா இராசநாயகம், திரு. எஸ். பாலசுப்பிரமணியம், திரு. சி. பரமநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (இ-5)

மின்இணைப்பு: ஆனால் மின்சாரம் இல்லை

மண்டைதீவு, ஜன. 8 கிராமிய மின்விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் மண்டைதீவு முகப்பு வயல் வீதிக்கு மின் இணைப்பு பொருத்தப்பட்டது.

சுமார் ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்பட்டு மின் விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்றும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதால் மக்கள் பெரும் அவலநிலைக்கு உள்ளாகி இருக்கின்றனர். (இ-88)

வைத்திய நிலையத்தை திறந்து வைப்பதால் மட்டும் அகதிகள் பிரச்சினை தீராது

முள்ளியவளை ஜன. 8 இந்த வைத்திய நிலையத்தைத்திறந்து வைத்தால் மாத்திரம் அகதிகளின் தேவைகள் பூர்த்தியடையா. இங்கு கடமை புரியஇருக்கும் வைத்திய அதிகாரிகள் அகதிகள் மீது கருணைகாட்டி சேவையை நேர்மையாகவும் ஒழுங்காகவும் செய்யவேண்டும்.

முல்லை மாவட்டப் பிரசைகள் குழுவின் சார்பில் அளம்பில் மத்திய மருந்தகத் திறப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முல்லை மாவட்டப் பிரசைகள் குழுத் தலைவர் திரு.பொ. சந்திரசேகரி மேற்கண்டவாறு கூறினார்.

அளம்பில் சுற்றுப் புறங்களில் இருக்கும் அகதிகள் இந்த வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்றும் இவர் கேட்டுக் கொண்டார்.

முல்லை மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியாகஉதவி அரசாங்க அதிபர் திரு எஸ். கே. சர்வானந்தன் பங்குபற்றினர்.

அளம்பில் பிரசைகள் குழுத்தலைவர் திரு. ஜோர்ஜ் வரவேற்புரை நிகழ்த்தினர்.

முல்லை மாவட்டப் பிரசைகள் குழுச்செயலாளர் திரு. கே. கதிரவேலு நன்றியுரை கூறினர்

திரு. ந. அருணசலம் (முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்) திரு. எஸ். பேசுரத்தினம் (காணி உத்தியோகத்தர்) திரு. பொ. சேதுபதி, திரு முத்து சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்கள். (இ-93)

ஹெலியிலிருந்து துண்டுப்பிரசுரம்

கல்முனை, ஜன 8 கல்முனைப் பகுதியில் ஹெலியிலிருந்து துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்தியப்பத்திரிகையான துக்ளக்கில் வெளிவந்த ''காவல் துறையின் கவலை'' என்னும் தலைப்பிலான செய்தியே துண்டுப் பிரசுரத்தில் இடம் பெற்றிருந்தது. (இ-84)

செவன நிதி உதவி

கரவெட்டி, ஜன. 8 செவன நிதித்திட்டத்தின் கீழ் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உதவி அரசாங்க அதிபர் திரு.இ ஐயாத்துரை ஏழு குடும்பங்களுக்கு 2ஆயிரத்து500 ரூபாவை முதற் கட்ட நிதியாக பகிர்ந்து வழங்கினர். (இ-70)

ஆயுள்வேத பரீட்சை மாத இறுதியில்

யாழ்ப்பாணம், ஜன 8 யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று வருடங்களாக நடைபெறாது இருந்த ஆயுள் வேதக் கல்லூரிப் பரீட்சைகள் இம்மாத இறுதியில் நடைபெறலாமென நம்பப்படுகிறது.

யாழ் மாணவர்கள் அரச அதிபரிடம் இது பற்றி முறையிட்டதைத் தொடர்ந்து, அரச அதிபர் பல்கலைக்கழக மானியக் குழுவுடன் தொடர்பு கொண்டு இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். (இ-5)

விளையாட்டரங்கு

அராலியில்

பொங்கல் தின விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் ஜன. 8 அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தினர் வழமைபோல் இம்முறையும்தைப்பொங்கல் தினத்தன்று உழவர் விழாவை சிறப்பாக நடத்த தீர்மானித்துள்ளனர்.

சகல விளையாட்டுப் போட்டிகளும் கழக மைதானமான மாவத்தை விளையாட்டு மைதானத்தில் 14-ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் கைக்கொடி மாட்டு வண்டிச் சவாரி, மெய் வல்லுநர் போட்டிகள், உதைபந்தாட்டப் போட்டிகள், சிறுவர் நிகழ்ச்சிகள், விநோத உடைப் போட்டிகள் அராலிக் கிராமத்தில்உள்ளமாட்டு வண்டிகளின் பவனி ஆகியவை இடம் பெறவுள்ளன.

போட்டிகள் கழகத் தலைவர் செல்வன் ச. செந்தில்குமரன் தலைமையில் நடைபெற உள்ளன. (இ-)

ஹெலி தாக்குதலில் மயிரிழையில் தப்பிய பஸ் பிரயாணிகள்

யாழ்ப்பாணம், ஜன. 8 கொழும்பிலிருந்து மூன்று தனியார் பஸ்கள் மூலம் யாழ் வந்த பயணிகள் வழியில் கிளிநொச்சியில் இடம் பெற்றதாக்குதலிலிருந்து மயிரிழையில் உயிர்தப்பினர்.

இச்சம்பவம் சிலதினங்களுக்கு முன் நடைபெற்றது

பகல் 1மணி அளவில் இரணைமடுக் குளத்துக் கருகில் பஸ் வந்துகொண்டிருந்தது.இவர்கள் வந்த பஸ்சுக்கு முன்னால் வந்த இரு பஸ்கள் அங்கே சேற்றில் புதைந்து நின்றன

மூன்று பஸ்களும் அங்கே நிறுத்திவைக்கப்பட்டு பிரயாணிகள் பலர் இறங்கி நின்றனர்.

அப்போது ஆனையிறவு முகாமிலிருந்து வந்த ஹெலி ஒன்று இவர்களை மையமாக வைத்து மேலே வட்டமிட்டது; திடீரென அது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளத் தொடங்கியது.

பயணிகள் பதறியபடி, அலறியபடி அருகிலிருந்த குடிசைகள், மரங்கள் என்பவற்றில் தஞ்சமடைந்தனர்.

சுமார் முக்கால் மணி நேரம் ஹெலித்தாக்குதல் இடம் பெற்றது.

யாழ்மாவட்ட அபிவிருத்திச் சபை பிரதமகணக்காளர் திரு. எம். கே. இராஜேந்திரன் இத்தகவலை தெரிவித்தார்

இவரும் யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை உதவிச் செயலாளர் திரு. எஸ் பரமநாதனும் இவ் பஸ்ஸில் அப்பொழுது பயணம் செய்தனர். (இ-5)

புதுடில்லி செல்லும் குழுக்கள்

கொழும்பு, ஜன. 8 தென் ஆபிரிக்க இன ஒதுக்கல்எதிர்ப்புமாநாட்டில் கலந்துகொள்ள யு. என். பி., சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தூதுக்குழுக்கள் புதுடில்லி புறப்பட்டுச் சென்றன.

பம்பாய் வழியாகச் செல்லும் இத்தூதுக்குழு இளைஞர் இந்திரா காங்கிரஸ் நடத்தும் தென் ஆபிரிக்க இன ஒதுக்கல் எதிர்ப்பு மாநாட்டில் கலந்துகொள்ளும்.

இளைஞர் இந்திராகாங்கிரஸின் அழைப்பை ஏற்றே இக்குழுக்கள் செல்கின்றன.

மாநாடு இன்று புதுடில்லியில்ஆரம்பமாகும் (இ-எ)

பாடசாலைகளில் அரச எதிர்ப்பு பிரசாரமாம்

மட்டக்களப்பு ஜன 8 அரசாங்க பாடசாலைகளில் அரச எதிர்ப்பு பிரசாரங்களுக்கு இடமளிக்கக்கூடாது.

கல்வி அமைச்சு சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் இப்படி உத்தரவிட்டுள்ளது

அரச எதிர்ப்புப் பிரசாரங்கள் பாடசாலைகளில் மாணவர், ஆசிரியர் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனை அடுத்தே அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிகின்றது (இ-27)

மின்கம்பத் தண்டனை

கல்முனை, ஜன. 8 பொத்துவில் தொகுதியில்உள்ள கோமாரி என்னும் இடத்தில் போராளிகளால் இருவருக்கு மின்கம்ப தண்டனைவழங்கப்பட்டது

ஆடு வாங்கச் சென்ற முஸ்லிம் ஒருவரைக் கொலை செய்து கொள்ளையடித்த குற்றத்திற்காகவே இத்தண்டனை வழங்கப்பட்டது. (இ-84)

தனியார் கல்வி நிலையங்களிலேயே கூடிய கவனம்

மாணவருக்கு ஆசிரியர் செய்யும் துரோகம்

புலிகள் பிரமுகர் உரை

கரவெட்டி, ஜன.8 பெரும்பாலான ஆசிரியர்கள் பாடசாலைகளில் ஒழுங்காகக் கல்வி புகட்டாது தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கின்றனர்.

இச்செயல் எமது மாணவர்களுக்கு ஆசிரியர்கள் செய்யும் துரோகம் ஆகும்.

துன்னாலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பண வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நெல்லியடி பிரதேசப் பொறுப்பாளர் திரு. சுக்லா மேற்கண்டவாறு கூறினர்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். சிறிஸ்காந்தராஜா தலைமையில் வைபவம் நடைபெற்றது

திரு சுக்லா மேலும் உரையாற்றுகையில், எமது தமிழ் சமுதாயம் சிறந்த முறையில்அமைய வேண்டுமாயின் சுயநலத்தை விடுத்து சேவை அடிப்படையில் செயற்பட வேண்டும்.

அரசாங்கத்தின் அடாவடித்தனத்தினால் தமிழ் பாடசாலைகள் செயலிழந்த நிலையில் உள்ளன.

வடமராட்சியில் ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி,வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி ஆகியவை இராணுவத்தின் அடாவடித்தனத்தினால் பாதிப்புற்றுள்ளன.

மேலும் மோசமடைந்துவரும் இக்கால கட்டத்தில் ஆசிரியர்கள் சேவை அடிப்படையில் செயற்பட வேண்டும் மாணவர்கள் தமது எதிர்காலத்தை முன்னிட்டு கல்வியை செல்வமாக கொண்டு கற்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் நெல்லியடிப் பேச்சாளர் திரு. செங் [illegible] உரையாற்றினார். (இ-70)

மக்கள் முகம்

வாசகர் வட்டம்

வட்டுக்கோட்டை,ஜன.8 வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணி வாசகர் வட்ட நிர்வாகிகள் வருமாறு;

போஷகர்: திரு எம். எஸ், விக்கினேஸ்வரன் தலைவர்: திரு இ. விஜயகுமார் உபதலைவர்: திரு ஆ. சிவஞானம் செயலாளர்: திரு. சி சிவானந்தன் உபசெயலாளர்: திரு. இ கணேசமூர்த்தி பொருளாளர்: திரு. வே புலேந்திரன் கணக்குப் பரிசோதகர்கள் திரு. பொ. கதிர்காமநாதன், திரு து சிவநேசன்.

நிலையப் பொறுப்பாளர் திருமதி க. குணரத்தினம் வெளித்தொடர்பு அலுவலர்கள்: திரு ந. மகேந்திரன், திரு. அ. தவநாயகம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்: திரு க சிவராசா, திரு. க சரவணபவன், திரு. க யோகேஸ்வரன், திரு. து. சிவநேசன். திரு த அகிலன், திரு. சி. புண்ணியமூர்த்தி. திரு. பொ. கதிர்காமநாதன், திரு ந. மகேந்திரன், திரு சு. ஜெயராம்குமார், திரு அ. விக்கேஸ்வரன், திரு. க. மனோகரன். (இ 161)

வெளிவாரி மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஜன.8 யாழ்ப்பாணம் வெளிவாரி மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு;

தலைவர்: என். விஜயேந்திரன் உபதலைவர்: செல்வி வி. ரி. சிவாம்பிகை செயலாளர்: ந. சுகுணன் உபசெயலாளர்: செல்வி சு. குமுதினி பொருளாளர்: வி. சிவராஜா காப்பாளர்: இ. சத்தீஸ்வரன் ஆலோசனைக்குழு உறுப்பினர்: வே. சிவயோகலிங்கம். (இ-எ)

கசிப்பு பிடிபட்டது

யாழ்ப்பாணம்.ஜன 8 வதிரி மேற்கிலுள்ள பத்தியவத்தை என்னுமிடத்தில் புலிகளினால் கசிப்பு கைப்பற்றப்பட்டது.

கசிப்பு உற்பத்தியாளரும் கைது செய்யப்பட்டார்.

இருவர் புலிகளால் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து பத்தியவத்தை வாசி கைதானர்.

அவர் எதிர்பாராத வகையில் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு உற்பத்திப் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

5000 ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது

எச்சரிக்கை செய்யப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டார். (இ-160)

அறிவித்தல்

கால்நடை உணவுகளின் விலை அதிகரிப்பு

எமது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் கால்நடை உணவுகளின் விலைகள் மூலப்பொருட்களின் விலை உயர்வு காரணமாக 7-1-87 ஆம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கால்நடை உணவுகளின் தரத்தை மேலும் உயர்த்தி மூலப்பொருட்களின் கலவை விகிதாசாரத்தில் முன்னேற்றமான முறைகளைக் கையாண்டு வருகின்றோம் என்பதனை தங்களுக்கு அறியத்தருவதோடு, தொடர்ந்தும் சகல வாடிக்கையாளர்களும் எமக்குப் பூரண ஒத்துழைப்பு நல்குமாறும் வேட்டுக்கொள்ளுகின்றோம்.

கால்நடை உணவுகளின் புதிய விலைகள் விபரம்

விபரம்	கி. கி.	விலை ரூ.	ச.
கறவைப்பசு உணவு	25	100	00
கறவைப்பசு உணவு	50	190	00
முட்டையிடும் கோழி உணவு	25	150	00
வளரும் குஞ்சு உணவு	25	150	00
குஞ்சு உணவு	25	170	00
இறைச்சிக்கோழிஉணவு	25	170	00

யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

தலைவர்

★ லண்டன்
★ ஜெர்மன்
★ பெல்ஜியம்

நம்பிக்கைவாய்ந்த பயணம்

உடனடியாக

தாமதமின்றித் தொடர்புகொள்க

யாழ்—கொழும்பு விமான சேவை

பலாலிக்கு விசேட போக்குவரத்து வசதிகளுடன்

ஒழுங்காக நடைபெறுகிறது

உங்கள் ஆசனங்களைப் பதிவு செய்க

AUCTIONERS & BROKERS

எங்கள் சேவைகள்:

- எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
- துரிதமான பாஸ்போட், விசா, பொண்ட் ஒழுங்குகள்
- CONFIRMATIONS, RE-CONFIRMATIONS & CANCELLATIONS
- இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்

ரெலிபோன் - ரெலெக்ஸ்
முதல் தரமான சேவை
OPEN 24 HOURS

Mack Communications & Travels
இல 8. முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். TELE: 24791, 24836

உதய சங்கற்பம்

காலம் எல்லாம் நல்லது. அது நாம் செய்யப்போகும் வேலையைப் பொறுத்த அளவில்.

— எமர்சன்.

உதயன்

இல,16, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 08-01-1987 த. பெ இல 28

என்ன கொடுத்தார்; எதனைக் கொடுத்தார்?

பிரிவினை வாதிகளுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகள் எல்லாம் கொடுத்தாகி விட்டது. இனிமேல் கொடுப்பதற்கு ஒன்றுமே இல்லை.

இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை ஜனாதிபதி ஆகக் கடைசியாக வெளியிட்ட கருத்து இது. உலகளாவிய ரீதியில் விற்பனையாகும் பிரபல ஆங்கில வாரசஞ்சிகையான "நியூஸ் வீக்'' இற்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சித்துக் களைத்து விட்டேன். இனி ஆயுத பலத்தினால் தீர்வு காண வேண்டும்; இல்லையேல் அப்படியே விட்டுவிட வேண்டும்— என்றும் ஜனாதிபதி சலித்திருக்கிறார்.

அவர் இதுவரை நடத்திய பேச்சுக்களின் போது தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கெனக் கொடுக்க முன்வந்தது என்ன? மாகாண சபைகள். அந்தச் சபைகளோடு பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என அவர் நினைத்தால் நிச்சயம் அது முடியாத காரியம் தான்.

முன்னர் மாவட்ட சபையாகக் கொடுத்ததை சற்று விரிவுபடுத்தி மாகாண சபையாக்கி உள்ளார். அவ்வளவுதான்.

தமிழர்களின் ஆகக் குறைந்த எதிர்பார்ப்புகள் எவை என்பதை அவர் இன்னும் அறிந்து கொள்ளவில்லையா? அல்லது புரிந்து கொள்ளவில்லையா? இல்லை. அவர் புரிந்தும் புரியாதவர் போலப் பேசுகிறார்.

தமிழர்களின் நியாயமான ஆகக் குறைந்த கோரிக்கைகளைக் கூட வழங்கக்கூடாது. தாம் நினைக்கும் தீர்வையே திணிக்க வேண்டும் என்பதே அவரது உள்ளக் கிடக்கை. கடந்த நான்கு வருடங்களாக அடிக்கடி நடக்கும் பேச்சுவார்த்தைகள், சந்திப்புக்களை அலசி ஆராய்ந்தால் முன்கண்ட முடிவை இலகுவில் பெறக்கூடியதாக உள்ளது.

சிங்கள மக்கள் தங்களைத் தாமே ஆளுகிறார்கள். தமது அலுவல்களைத் தாமே பார்க்கிறார்கள். தங்கள் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கிறார்கள் தமது மொழி, கலாசாரம், பண்பாடுகளை கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் வளர்க்கிறார்கள். தங்கள் பிரதேசங்களை அபிவிருத்தி செய்கிறார்கள்.

அதே உரிமைகளைத் தமிழ் மக்கள் அனுபவிக்க நினைப்பதில் உள்ள தவறு என்ன? அந்த உரிமைகளை வழங்கும் விதத்தில் அரசின் மாகாணசபை யோசனைகள் உள்ளனவா? தமிழர்களுக்குப் பூரண சுயாட்சி வழங்குவதற்கு மாகாணசபைத் திட்டம் வசதி செய்கிறதா?

ஒரு தனி மனிதன் அல்லது இனம் வாழ்வதற்கு ஒரு காணி அல்லது பிரதேசம் தேவை. தமிழர்கள் ஆண்டாண்டு காலமாக வாழும் தமிழர் தாயகத்தை அங்கீகரிக்காமல் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

தமிழர்கள் தனி இனம் அவர்களுக்கென மொழி, கலை, கலாசாரம், வரலாறு என்பன உண்டு. அவ்வாறுயின் அவர்களைத் தனி இனமாக அங்கீகரிக்காமல் பிரச்சினையை நியாயமாகத் தீர்த்து வைக்க முடியும் என்று எவரும் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றுகச் சேர்ந்து வாழ்வதற்கு, ஆள்வதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. தமிழர்கள் சிறுபான்மையினராக இருப்பதால் அவர்களை ஒடுக்க வேண்டும், அவர்தம் உரிமைகளை நசுக்க வேண்டும் என்ற எண்ணம் சிங்களத் தலைவர்களிடையே மேலோங்கி, வெறியாகவும் மாறிவிட்டது

ஆகவே இனியும் தமிழர்கள் அந்த ஒற்றை ஆட்சி முறையை ஏற்கமாட்டார்கள். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள எந்த அமைப்பின் மூலமும் அவர்கள் பூரண சுதந்திரத்துடன் வாழ முடியாது. கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் வாழமுடியாது.

அவர்கள் அவ்வாறு வாழ்வதற்கு ஆகக் குறைந்தது பூரண அதிகாரம் உள்ள மாநில சுயாட்சியாவது அவசியம். அதனை விடக் குறைந்த எதன் மூலமும் தமிழர்களைத் திருப்திப்படுத்த முடியாது

இதனை உணர்ந்து, நியாயத் தீர்வைக் கொண்டு வர வேண்டும் என்று இலங்கை அரசு மனமார நினைக்கும் வரை பேச்சுவார்த்தை எதுவும் பிரச்சினையைத் தீர்க்காது என்பது உண்மையே. அதனை உணர்ந்துதான் ஜனாதிபதி தாம் களைத்து விட்டதாகக் கூறுகிறார் போலும்!

மாகாண சபைகளுக்கு மேல் எதுவும் கொடுக்க மாட்டேன், தமிழர் தாயகத்தைப் பிரித்துத்தான் திட்டம் தருவேன் என்று அவர் அழுங்குப்பிடி பிடிக்கும் வரை பேச்சுக்கள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது மிகத் தெளிவு.

ஆகையால்—

அவர் ஒன்றில் இராணுவ நடவடிக்கை எடுத்துத் தமிழர்களை அழித்தொழிக்க வேண்டும். இல்லையேல் நியாயமான தீர்வுக்கு விட்டுக் கொடுக்க ஆயத்தம் செய்ய வேண்டும். அவர் எதற்கு ஆயத்தம் செய்கிறாரோ தெரியவில்லை! அவர் ஆழமானவர். இலகுவில் அளந்து கொள்ளமுடியாதவர்.

இந்திய வெளியுறவுச் செயலாளர்

வெங்கடேஸ்வரன் அமெரிக்கா விஜயம்

வாஷிங்டன், ஜன. 7

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ஏ. பி. வெங்கடேஸ்வரன் அமெரிக்க விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கிறார்.

இது முக்கிய விஜயம் என்று இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன

இரண்டு தினங்கள் இவர் அமெரிக்காவில் தங்கி இருப்பார்.

அமெரிக்க அதிபர் றேகன், அரசின் சிரேஷ்ட அதிகாரிகள், அமைச்சர்களுடன் திரு வெங்கடேஸ்வரன் இருதரப்பு உறவுகள் குறித்து விரிவாகப் பேச்சுக்கள் நடத்தவிருக்கின்றார்

அமெரிக்க அரசின் அரசியல் விவகார உதவி அமைச்சர் திரு. ஆர்ம்கோஸ்ட், உதவி வெளி விவகாரச் செயலாளர் ஆகியோருடனும் திரு. வெங்கடேஸ்வரன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார்.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ஆயுதங்களை விநியோகிப்பது. இலங்கை இனப் பிரச்சினை ஆகியன குறித்தும் திரு வெங்கடேஸ்வரன் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார் என்று தெரிகிறது (இ-எ)

பிலிப்பீன்ஸ் யுத்த நிறுத்தம்: நாற்பது மீறல்கள்

மணிலா, ஜன. 7

பிலிப்பீன்ஸ் அரசுக்கும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்களுக்கும் இடையே அமுல் நடத்தப்படும் யுத்த நிறுத்தத்தில் 40 மீறல்கள் இது வரை இடம் பெற்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய யுத்த நிறுத்தக் கமிட்டித் தலைவர் இதனை அறிவித்தார்

அரசுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்கும்இடையேயான யுத்த நிறுத்தம் டிசம்பர் 10ஆம் திகதி அமுலுக்கு வந்தது

இந்த 40 மீறல்களில் 14 ராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன என்று கிளர்ச்சிக்காரர்கள் முறையிட்டனர்.

(இ-எ)

இரண்டு வருடகால சீன-வியட். மோதலில் 500 சீன வீரர் பலி

ஹனோய், ஜன. 7

வியட்னும் - சீன எல்லைச் சண்டையில் கடந்த இரண்டு வருடங்களில் 500 சீனத் துருப்புக்கள் உயிரிழந்தனர்.

இப்படி ஹனோய் வானொலி அறிவித்தது.

கம்போடியாவை, வியட்னும் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து சீனுவுக்கும் வியட்னுமுக்குமிடையே எல்லைத் தகராறு 1979ஆம் ஆண்டில் ஆரம்பித்தது.

வியட்னுமின் வட மாகாணத்தில் சீனத் துருப்புக்கள் நுழைய முயன்றபோதே சீனத் துருப்புக்கள் தாக்குதலுக்கு ஆளானுர்கள்.

இம்மோதலின்போது பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன என்றும் ஹனோய் வானொலி தெரிவித்தது.

வியட்னுமுக்கு ரஷ்யாவின் ஆதரவு உள்ளது.

(இ-எ)

பிரிட்டிஷ் அமெரிக்க பேச்சுவார்த்தை

பெர்முடா, ஜன. 7

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் சேர் ஜோப்ரி ஹோவும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸும் ஆயுதக் கட்டுப்பாடு பற்றிப் பேச்சுக்களை ஆரம்பித்தனர்,

பெர்முடா தீவில் நடைபெறும் இப்பேச்சுக்களின் போது பொருளாதார அபிவிருத்தி பற்றிய விஷயங்களும் ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

★ எய்ட்ஸ் துண்டுப்பிரசுரம்

தன்னினச் சேர்க்கையில் நாட்டங் கொண்டவர்களை மட்டுமல்ல; ஒவ்வொரு ஆணையும் பெண்ணையும் பிடிக்கக் கூடியது எய்ட்ஸ் நோய்.

இப்படிக் கூறும் 2 கோடி 30 லட்சம் துண்டுப் பிரசுரங்கள் அடுத்த வாரம் முதல் பிரிட்டனில் வீடு வீடாக விநியோகிக்கப்படவிருக்கின்றன. (இ - எ)

இஸ்லாமிய நாடுகளில் எய்ட்ஸ் தடுப்பு

ஜெனீவா, ஜன. 7

20 இஸ்லாமிய நாடுகள் எய்ட்ஸ் நோய்த் தடுப்புப் பிரசார வேலைகளை தீவிரமாக்க உள்ளன.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியை இதற்காக இந் நாடுகள் கோரியுள்ளன

டுனிசியாவில் இருந்து பாகிஸ்தான் வரையான இஸ்லாமிய நாடுகளில்வாழும் சுமார் 30 கோடி முஸ்லிம் மக்கள் இதனுல் பயனடைவர். (இ-எ)

1 லட்சம் கோடி டாலர் வரவு செலவுத் திட்டம்

றேகனுக்கு ஏற்படுத்திய நெருக்கடி

வாஷிங்டன் ஜன.7

ஒரு லட்சம் கோடி டாலர் வரவு செலவுத் திட்டத்துக்கு எப்படி அமெரிக்க செனட், காங்கிரஸ்ஆகியவற்றின் அனுமதியைப் பெறுவது என்பது அமெரிக்க அதிபர் றேகனுக்கு தலையிடியைக் கொடுத்துள்ளது

செனட்டும், காங்கிரஸும் ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளன.

அமெரிக்கா தனது சரித்திரத்திலேயே இவ்வளவு பெருந்தொகைகொண்ட வரவு செலவு திட்டத்தை தயாரித்துள்ளது இதுவே முதல் தடவையாகும் என்று அறிவிக்கப்பட்டது.

முன்னூற்று பன்னிரண்டாயிரம் லட்சம் டாலர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது

இந்த உத்தேச வரவு செலவு திட்டத்தில் 108 ஆயிரம் லட்சம் டாலர் வருமானமாகவும் 220 ஆயிரம் டாலர் செலவினமாகவும் காட்டப்பட்டுள்ளது. (இ-எ)

வெளி உலகில்

பிரிட்டனில் திடீர் தேர்தல் இல்லை

பி.பி சி. பேட்டியில் தாட்சர்

லண்டன், ஜன. 7

பிரிட்டனில் திடீர் பொதுத் தேர்தல் நடக்காது.

இப்படி பிரதமர் மாக்கிரட் தாட்சர் லண்டன் பி பி. சி. வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றில் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

எதிர்வரும் ஏப்ரலில் பிரிட்டனில் தேர்தல் நடக்கலாம் என்ற ஹேஸ்யத்தை பிரதமர் நிராகரித்து விட்டார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் ஆயுள் முடிவடையக் காலம் உள்ளது. அதற்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவதை மக்களும் விரும்ப மாட்டார்கள்— இப்படி பிரதமர் தாட்சர் அப்பேட்டியில் தெரிவித்தார்.

இதனிடையில் திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்நோக்குவதற்கான பிரசார வேலைகளை மேற்கொள்ள பிரதான எதிர்க்கட்சியான தொழில் கட்சி தயாராகி வருகிறது.

(இ-எ)

ரஷ்யக்குழு ஆப்கனில

காபூல், ஜன. 7

ரஷ்ய வெளிநாட்டு அமைச்சர் ஷெர்வாட்நேஸ தலைமையிலான குழு ஒன்று ஆப்கன் சென்றுள்ளது

ஆப்கன் ஜனாதிபதி நஜிபுல்லாவுடன் பேச்சுக்கள் நடத்தச் சென்றுள்ள இந்தக் குழு, எவ்வளவு தினங்கள் காபூலில் தங்கியிருக்கும் என்று அறிவிக்கப்படவில்லை. (இ-எ)

ஈரான் விவகாரம்

செனட் தெரிவுக்குழு அடுத்தமாதம் விசாரணை

வாஷிங்டன், ஜன. 7

ஈரானுக்கு ஆயுதம் விற்ற சம்பவம் தொடர்பான விசாரணைகளை அமெரிக்க செனட்டின் தெரிவுக்குழு அடுத்த மாதம் ஆரம்பிக்க இருக்கிறது.

இதுபற்றி நடத்தப்பட்ட பூர்வாங்க விசாரணைகள் பற்றிய அறிக்கையைத் தெரிவுக்குழு ஆராயும்.

செனட்டின் புலனாய்வுக்குழு இப்பூர்வாங்க விசாரணைகளை நடத்தியது.

பூர்வாங்க விசாரணைகள் பற்றிய அறிக்கையை வெளியிட வேண்டும் என்று அதிபர் றேகன் முன்னர் விடுத்த கோரிக்கையை புலனாய்வுக் குழு நிராகரித்துவிட்டது.

இதனிடையில் ஜனநாயகக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள அமெரிக்க நாடாளுமன்றம் தனது கூட்டத்தொடரை இன்று புதன்கிழமை ஆரம்பித்தது.

(இ-எ)

வழக்கறிஞரின் உடைமை கொள்ளை

ஹென்றி பெரேரா வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 8

பயங்கரவாதச் தடைச் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்ட ஹென்றி பெரேராவுக்காக ஆஜராகும் சட்டத்தரணி எம். சோமசுந்தரத்தின் உடைமைகளும் முல்லைத் தீவில் வைத்துக் கொள்ளையடிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்து கொண்டிருக்கையில் தான் வந்த பஸ் முல்லைத்தீவில் வழிமறிக்கப்பட்டு பயணிகளின் உடைமைகள் கொள்ளையிடப்பட்டன என்று சட்டத்தரணி எம். சோமசுந்தரம் கடந்த திங்கள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தனது உடைமைகளும் அப்போது கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாகவும் அதனால் வழக்கு விசாரணையை இன்னொரு திகதிக்கு பின் போடும்படியும் திரு. சோமசுந்தரம் மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யு. சேனநாயக்காவைக் கேட்டுக் கொண்டார்.

அதற்கு இணங்க ஹென்றி பெரேரா மீதான வழக்கு விசாரணை ஜனவரி 15க்கு ஒத்திவைக்கப்பட்டது.

(இ-ஐ-எ)

வாசகர் திருமுகம்

பயிற்சி பெருத ஆங்கில ஆசிரியர் அவல நிலை

ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெற்ற தராதரப் பத்திரமுள்ள, தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் 1985 ஆம் ஆண்டுவரை தாம் விரும்பிய பாட நெறிக்கு விண்ணப்பித்து ஆசிரிய கலாசாலைக்குச் செல்லக்கூடிய வாய்ப்பிருந்தது

ஆனால் 1985 ஆம் ஆண்டிற்குப்பின் இந்த ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கிலம் தவிர்ந்த வேறு பாடநெறிகளுக்கு விண்ணப்பித்து ஆசிரியகலாசாலைப் பயிற்சிக்குச் செல்ல முடியாது. இத்தடையால் பலர் பயிற்சி பெருமல் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆங்கில ஆசிரியர்கள் ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்து ஆங்கில ஆசிரிய கலாசாலை புகுமுகப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். இப்பரீட்சையின் மூலம் ஒரு மாவட்டத்தில் இருந்து ஒரு சிலரே கலாசாலைக்குச் செல்கின்றனர். ஏனையோருக்குப் பயிற்சி பெறும் வாய்ப்பு கிடைக்காமல் போகிறது.

ஆங்கிலப் பாடநெறி, தமிழ்ப்பகுதி ஆசிரிய கலாசாலைகளில் தற்பொழுது மூடப்பட்டுள்ளது. பலாலி ஆசிரிய கலாசாலையில் இருந்த ஆங்கில பாடநெறியும் 1983 ஆம் ஆண்டுடன் மூடப்பட்டு விட்டது.

ஆங்கில பாடநெறிக்கு தெரிவு செய்யப்படுபவர்களும் தென்னிலங்கையில் உள்ள ஆங்கில ஆசிரிய கலாசாலைக்கு பயிற்சிக்குச் செல்லத் தயக்கம் காட்டுகின்றார்கள்.

இவ்விடயத்தில் ஆசிரிய சங்கங்கள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு பலாலி ஆசிரிய கலாசாலையில் மூடப்பட்ட ஆங்கில பாடநெறியை மீண்டும் ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆங்கில ஆசிரியர்கள் தாம் விரும்பிய பாடநெறியில் பயிற்சி பெற அனுமதி அளிக்க வேண்டும்.

ஆங்கில ஆசிரியர்கள் தாம் விரும்பிய பாடநெறியில் பயிற்சி பெற அனுமதிக்க வேண்டும் என்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை கல்வி அமைச்சின் செயலாளர் ஏற்றுக் கொண்டதாக இச்சங்கத்தின் ஏடான "ஆசிரியன்'' யூன் 1986 இதழில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது

ஆனால் சமீபத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைகளில் வேறு பாடநெறிக்கு விண்ணப்பித்த ஆங்கில ஆசிரியர்களுக்கு அப்பாடநெறிகளுக்கான அனுமதி மறுக்கப்பட்டது. இவ்விடயத்தில் ஆசிரிய சங்கங்களின் [illegible] ஆசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

யாழ்ப்பாணம். ஓர் ஆசிரியன்

● பாடசாலை வாரம்

யாழ்ப்பாணம், ஜன.8

இம்மாதம் 12ஆம் திகதிமுதல் 16ஆம் திகதி வரை சகல பாடசாலைகளிலும்பாடசாலை வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதுசம்பந்தமானசகல செயற்பாடுகள் குறித்தும் கல்விச்சேவைகள் அமைச்சு அதிபர்களுக்கு அறிவித்துள்ளது

சிரமதானம் மூலம் பாடசாலைச் சுற்றுடலைத் தூய்மைப்படுத்தல், சுவர் [illegible] தல், மரம்நடல்போன்ற [illegible] வாரத்தில் இடம்பெறும்.

(இ-5)

பொய்யாமொழி

குறள்:

ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு.

பொருள்:

மெய்யுணர்வு இல்லாதவர்க்கு ஐந்து புலன்களின் வேறுபாட்டால் வளர்ந்த ஐந்து வகை உணர்வும் முற்றப்பெற்ற போதிலும் பயன் இல்லை

செய்திக்கொத்து

சமாதானமாக தீர்த்துவைப்பு

வேலணை, ஜன. 8

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்திலுல் பல வருடங்களாகத் தீர்க்கப்படாமல் இருந்துவந்த காணித் தகராறு சம்பந்தமான வழக்கு ஒன்று வேலணை மேற்கு கிராம நீதிமன்ற விசாரணையின்பின் இரு பகுதியினருக்கும்பாதிப்பு இல்லாமல் சமாதானமான முறையில் தீர்த்து வைக்கப்பட்டது.

(இ-167)

வீடமைப்பு போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 8

குறைந்த செலவில் வீடுகள் அமைப்பதற்கு ஊக்குவிப்பு நடவடிக்கையாக அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்புத் திணைக்களம் போட்டிகள் நடத்துகின்றது. (இ-5)

இடமாற்றத்தை ரத்துச் செய்க

கொடிகாமம், ஜன 8

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசாவின் இடமாற்றத்தை உடனடியாக ரத்துச் செய்க.

இவ்வாறு கோரி தென்மராட்சியிலுள்ள கிராம அபிவிருத்தி சபைகள் அவற்றின் ஒன்றியங்கள், சனசமூக நிலையங்கள், அவற்றின் ஒன்றியங்கள் உட்படப் பல பொதுஸ்தாபனங்கள் யாழ் அரச அதிபருக்கும் உள்நாட்டு அமைச்சருக்கும் மகஜர் அனுப்பி உள்ளன.

(இ-75)

மன்னரில் வீட்டுத் தோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 8

மன்னர் மாவட்ட விவசாயத் திணைக்களம் மன்னர் மாவட்ட விவசாயிகளுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைப் போட்டிகளை நடத்துகிறது

இதற்கென 50 விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (இ-5)

ஆண்டு 6க்கான போட்டிப் பரீட்சை

பருத்தித்துறை, ஜன. 8

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி. பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரி ஆகியவற்றுக்கான ஆண்டு 6க்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை இம்மாதம் 31 ஆம் திகதி நடைபெற உள்ளது. இப்பரீட்சைக்கு வடமராட்சியிலுள்ள சகல பாடசாலை மாணவர்களும் விண்ணப்பிக்கலாமென பருத்தித்துறை கல்வி வட்டார பரீட்சைக் குழுச் செயலாளர் திரு. சி. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார் (இ-118)

மண்டைதீவில் வாசகர் வட்டம்

மண்டைதீவு, ஜன 8

மண்டைதீவுப் பகுதியில் வாசகர்கள் ஒன்றியம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட விருக்கின்றது.

யாழ்மாவட்ட அபிவிருத்திச் சபையின் மண்டைதீவு உப அலுவலக நிர்வாக அதிகாரி திரு. டி. பூபாலசுந்தரம் தலைமையில் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும். (இ-88)

தவறணைகளிலும் லீற்றர் முறை

வேலணை, ஜன. 8

இந்த ஆண்டு பெப்ரவரிமாதம் தொடக்கம் தவறணைகளில் போத்தல் முறை நீக்கப்பட்டு லீற்றர்முறை நடைமுறைப் படுத்தப்படும்.

இதனைச் செயற்படுத்த யாழ் மாவட்ட தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கச் சமாஜம் தீர்மானித்துள்ளது.

(இ-167)

முல்லைத்தீவு பஸ்'ஸும் பாதிப்பு

முள்ளியவளை, ஜன. 8

அரசாங்கத்தினுல் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட எரிபொருளினுல் முல்லைத்தீவு இ போ.ச வும் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளது

(இ-93)

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கு
ஸ்ருடியோ
★ நித்ய சித்ரா ★
சங்கானை.

உதயன்
08 01 1987 வியாழக்கிழமை

வீடியோ — கறுப்பு / வெள்ளை —
வர்ணப் படப்பிடிப்புக்கும்
பிறேம் செய்தலுக்கும்
கலர் படங்கள் கழுவுதற்கும்
ஸ்ருடியோ நித்ய சித்ரா,
சங்கானை.

வித்தாரம்

என்ன முரளி! தலையை ஒரு மாதிரி தொங்கப் போட்டுக் கொண்டு வாறீர்? என்ன கவலை! உம்மைப் பாக்க கப்பல் கவிண்டவன் மாதிரி எல்லோ கிடக்கு!

என்ன பழைய படி ஹெலி, பொம்பர் எல்லாம் சுத்தத் தொடங்கி விட்டுது. வானத்திலையிருந்து விளாசத் தொடங்கிவிட்டினம் எண்டு யோசிக்கிறியோ!

எரிபொருள் தடை போட்டதோட அரசாங்கப் பிரமுகர்கள் பேசி வந்த பேச்சுக்கள் இதுகளுக்கான ஆருடம் எண்டது தெரியுந்தானே

ஏன் நேற்றைய உதயனில ''லலித்திற்கு முழு அதிகாரம்; முன்னேடியா......? என்ட விஷயத்தை நீ படிச்சுப்பாக்கயில்லையே.

நான் சாத்திரங்களை நம்புறது மிகக் குறைவு. ''இண்டைக்கு அட்டமியில தொடங்கியிருக்கினம்'' எப்பிடி முடியுமோ எண்டு நேற்றையச் சம்பவங்களைப் பற்றி ஒரு சோதிடர்தான் கூறினர்.

உண்மையில நேற்றைக்கு அட்டமி தானோ எண்டு பக்கத்தில இருக்கிற கலண்டரைப் பாத்தேன். அட்டமி நவமி எண்டு போட்டிருக்கு. ஏதோ ஒவ்வொருவருக்கு ஒரு நம்பிக்கை எண்டு நினைச்சுக் கொண்டு கலண்டரின் இண்டைய இதழில கண்ணோடினேன். ஒரு அரியவாக்கு அதில் அச்சிடப்பட்டிருந்தது.

இன்றைய சூழ்நிலைக்கு அது மிக ரொம்பவும் பொருத்தமாக இருந்ததைக்கண்டு வியப்பு வந்தது.

பண்டாரநாயக்கா பிறந்த தினம் எண்டு ஒரு வரி. அதுக்குக்கீழ ''கோழையும் வீரனாவான் தன் உரிமைகள் பறிபோகும் போது'' எண்டு அடுத்த வரி

அந்த வரியில் கண்கள் குத்திட்டு நிக்க பழைய ஞாபகங்கள் மனதில் படம் ஓடின. உந்தப் பண்டாரநாயக்காதான் தமிழருக்கு இத்தனை இன்னலும் வாறதுக்குக் காரணம் எண்டு மனம் முதலில தவறுதலாக நினைச்சுது. பிறகு அது உணர்ந்திருக்க வேணும் அவருக்கு தமிழர்கள் நன்றி உடையவர்களாகஇருக்க வேண்டும் எண்டு திரும்பிச் சொன்னது.

எப்பிடி? அவர் சிங்களத்தை அரசாங்க பாஷையாக்கி, தமிழரை ஒதுக்கப் பாத்ததாலை தான், தமிழற்றை உரிமைகள் பறிபோனதாலை தான் இண்டைக்கு எங்கடை தம்பிமார் உப்பிடி வீரவேங்கைகளாக மாறி இருக்கிறுங்கள். சுதந்திர தாகம் வீறு கொள்வதற்கு மறைமுகமாக அடித்தளம் போட்டவர் அந்த எஸ். டபிள்யு. ஆர். டி தான்.

உரிமைகள் பறிபோனதாலை தான் சிறுபான்மையினராக இருந்த போதிலும் தமிழினம் வீராவேசம் கொண்டது எண்டு நினைச்சேன்.

கோட்டையில மட்டும் சுமார் நாலாயிரம் சிப்பாய்களைக் கொண்டு வந்து குவிச்சுப் போட்டு, வெளியே எப்ப விடலாம் எண்டு அரசுப் பிரமுகர்கள் யோசித்துக் கொண்டிருப்பதாக ஒரு கேள்வி,



நேற்று நகரில் ஒருவித 'போர்ப்பீதி'

யாழ்ப்பாணம், ஜன. 8 நேற்று மாலை 2.20 மணியளவில் ஆரம்பமான ஹெலி, ஷெல், துப்பாக்கிப் பிரயோக சத்தங்கள் நகரில் ஒருவித ''போர்ப் பீதி''யை ஏற்படுத்தின.

இடையில் சுமார் ஒருமணி நேரம் விட்ட ஹெலி, பொம்மர், சீபிளேன் ரோந்து மீண்டும் மாலை 5.15 மணியிலிருந்து தொடர்ந்தது.

மக்கள் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்று ஏங்கியவாறு காணப்பட்டனர்.

நகர்ப்புற மக்களில் பலர் ஆஸ்பத்திரியை நோக்கி படை எடுத்தனர்.

அதனால் ஆஸ்பத்திரியில் சனக் கூட்டம் நிரம்பி வழிந்தது (இ-10)

பேராசிரியர் மூலேயின்

அக்கினி ஹோத்திரயாக விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஜன. 8 யாழ் வந்துள்ள சர்வதேச ஹோம சிகிச்சை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். தி மூலேயின் அக்கினி ஹோத்திரயாக விரிவுரைகள் இன்று யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெறும்

இன்று காலை 9 00 மணிக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கும். 11 மணிக்கு விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்களுக்கும் விரிவுரைகள் நடைபெறும்.

நாளை 9ஆம் திகதி நண்பகல் 1-30 மணியளவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலும், பி. ப. 3 மணிக்கு யாழ் மருத்துவபீடத்திலும் மாலை 5-30 மணிக்கு ஈச்சமோட்டை வைரவர் கோவிலிலும் விரிவுரைகள் நடைபெறும். 11ஆம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் விரிவுரைகள் நடைபெறும்.

அக்னி ஹோத்திரயாக விரிவுரைகள் நடத்துவதற்காக பேராசிரியர் இருவாரங்களுக்கு யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார். (இ-5)

சிப்பாய்களை எதிர்த்து---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சிப்பாய்கள் தொலைத் தொடர்பு நிலையத்தினுள் புகுந்து புலிகளின் 'சென்றி' யை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

வேறு ஒரு பகுதியினர் கொட்டடி மீனாட்சி அம்மன் கோவிலடிப் பக்கமாக உள்ள வீடுகளினுள் சென்று மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதல்களை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் சமர் நடத்தினர்

தொலைத் தொடர்பு நிலையத்தினுள் நுழைந்த சிப்பாய்கள் பின்வாங்கிவிட்டதாகவும் மீனாட்சியம்மன் கோவிலடிப் பக்கம் நுழைந்த சிப்பாய்கள் வீடுகளுக்குள் தங்கி இருப்பதாகவும் தெரிய வந்தது. (இ-10)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 08 - 01 - 1987.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power-House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 [illegible] தொலைபேசி. 24805, 22075

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையிலிருந்து

தமிழரைக் காப்பாற்றுமாறு

ஜனார்த்தனன் வேண்டுகோள்

சென்னை, ஜன. 8 இலங்கை அரசு எடுக்க இருக்கும் பெரிய இராணுவ நடவடிக்கையில் இருந்து தமிழரைக் காப்பாற்ற விரைந்து நடவடிக்கை எடுங்கள்.

உலகத் தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் மேற்கண்டவாறு இந்திய அரசைக் கேட்டுள்ளார்.

எரிபொருள் தடையால் யாழ் குடாநாட்டு மக்கள் பட்டினி கிடந்து சாகவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலை பெரும் கவலையைத் தருகிறது என்றும் டாக்டர் ஜனார்த்தனன் இந்திய அரசுக்கு அனுப்பிய தந்தியில் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

இந்தியாவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

புதுடில்லி, ஜன. 7 காட்டாக்கில் நடக்கும் இலங்கை-இந்தியா கிரிக்கெட் அணிகளின் மூன்றாவது இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி ஒரு இன்னிங்ஸ் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இலங்கை அணியை அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 142 ஓட்டங்களுடன் இந்தியா முடித்து விட்டது.

ருமேஷ் ரத்னாயக்காவின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் முன்னூறாவது விக்கெட்டைப் பெற்ற கபில்தேவ், இந்த டெஸ்ட் போட்டியில் தலைசிறந்த ஆட்டக்காரராக தெரிவு செய்யப்பட்டார்

இன்றைய போட்டியில் சாஸ்திரிக்கு நான்கு விக்கெட்டுகளும் யாதாவிற்கு மூன்றும் மஹிந்தருக்கு இரண்டும் கிடைத்தன.

இந்தியா முதலாவது இன்னிங்ஸ்:- 400
இலங்கை முதலாவது இன்னிங்ஸ்:- 191
இலங்கை இரண்டாவது இன்னிங்ஸ்:- 142 (ஒ)

பஸ்களும் சேதம்

யாழ்ப்பாணம், ஜன. 8 வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் நேற்றைய ஷெல் தாக்குதலில் பலத்த சேதமடைந்தன.

ஷெல் குண்டுகளில் சில யாழ் மத்திய பஸ் நிலையத்தில் விழுந்த போதே இந்த இரு பஸ்களும் சேதம் அடைந்தன.

காற்றுப்போன நிலையில் பஸ்கள் அங்கு விடப்பட்டிருந்தன. மற்றும் சில பஸ்கள் சிறு சேதங்களுடன் அங்கிருந்து கொண்டு செல்லப்பட்டன. (இ-10)

வாகன லைசென்ஸ் கால அவகாசம் நீடிப்பு

பெப் 16 வரை பெறலாம்

யாழ்ப்பாணம். ஜன. 8 1987 ஆம் ஆண்டுக்கான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்கும் கால எல்லை 16.2.1987 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அறிவித்திருக்கிறார்-

16.2.87க்குப் பின்னர் அனுமதிப் பத்திரம் பெறுவோர் வழமையான தண்டனைப் பணம் செலுத்தவேண்டும்,

30.6.87க்கு முன்னர் அனுமதிப்பத்திரம் பெறுவோர் பத்துச் சதவீதம் தண்டனைப் பணம் செலுத்த வேண்டும்.

30.6.87 க்குபின், ஆனாலும் 31 12.87க்கு முன்னர் அனுமதிப் பத்திரம் பெறுவோரிடம் 20 சதவீதமும் அதன் பின்னர் அனுமதிப்பத்திரம் பெறுவோரிடம் 30 சதவீதமும் தண்டனைப் பணமாக அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனச் சொந்தக் காரர்கள் தங்கள் வாகனங்களுக்குரிய அனுமதிப்பத்திரத்தை குறிப்பிட்ட திகதிகளில் பெற்றுக் கொள்ளும்படி யாழ் அரச அதிபர் கேட்டுள்ளார். (இ - எ)

யாழ். நகரில்..,

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிரயோகம் செய்தது.

இதனிடையே மண்டைதீவுக் கடல் பகுதியில் ரோந்து சென்ற சிப்பாய்கள் சிறு படகுகளில் இருந்து நாவாந்துறைப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டனர்.

மும்முனைத் தாக்குதல்களும் சமகாலத்தில் நடந்தன. பி. ப. 6-30 மணி வரை சில நிமிட இடைவெளிகளுடன் தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெற்றன.

துப்பாக்கிப் பிரயோகங்கள் ஷெல் தாக்குதல்கள் ஹெலிச்சூடு காரணமாக மின்சாரக் கம்பிகள் தொலைத்தொடர்பு கம்பிகள் பல இடங்களில் அறுந்து விழுந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் நேற்று வட்டமிட்ட பொம்மர்கள் நவீனரகத்தைச்சேர்ந்தவையாகும். அவற்றில் ஒன்று கடும் பச்சை. மற்றது கடும் பச்சையும் வெள்ளையும் சேர்ந்தது.

இரண்டாவது விமானம் அதிவேக சக்தியுடைய சிறியரக விமானமாகும்.

மாலை 5.30 மணிக்குப் [illegible] ஒரு தடவை தாக்குதல் [illegible] (அ10)

இறந்த...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யில் வசிப்பவர்கள் என்றும் ஷெல் தாக்குதலுக்குப் பயந்து வீட்டு முற்றத்திற்கு ஓடிவந்த போது ஷெல் வீழ்ந்ததால் இருவரும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் என்று தெரிய வருகிறது. (இ-10)

போராளி சரண்

வல்வெட்டித்துறை, ஜன 8

திருகோணமலையைச் சேர்ந்த ஈ. பி. ஆர். எல். எவ் போராளி ஒருவர் வல்வைப் புலிகளிடம் சரணடைந்தார்.

தம்பையா சிவராஜா (வயது 26) என்பவரே இப்போராளி ஆவார்.

இந்தியாவில் பயிற்சி பெற்ற இவரின் சொந்த ஊர் நிலாவெளி என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-166)

இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 8 ஒட்டுசுட்டான் இராணுவ முகாமுக்கு முன்பாகச் சென்ற இளைஞர் ஒருவர் நேற்று சிப்பாய்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-10)

நகரில்,

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்.

அவர்கள் ஆஸ்பத்திரிக்கு வந்த நோயாளர்களைப் பேட்டிகண்டனர்.

பிரேத அறைக்குள் சென்று சிதைந்துபோன தம்பதியரின் சடலங்களையும் அவர்கள் பார்த்தனர் (இ-10)

மண்ணெண்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

துள்ள தாக்கங்கள்; வடபகுதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது பற்றிய விஷயங்கள் விரிவாக ஆராயபட்டன என்று தெரியவருகிறது (இ-எ

இந்தியா சொந்த யோசனைகளை தயாரிக்கும் நேரம் வந்துவிட்டது

உதயனுக்குத் தொண்டமான் பேட்டி

கொழும்பு, ஜன 8 இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா தனது சொந்த யோசனைகளைத் தயாரித்துக் கொடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது

அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இவ்வாறு தெரிவித்தார்.

உதயனுக்கு அளித்த பேட்டி ஒன்றில் அமைச்சர் திரு. தொண்டமான் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை அரசின் யோசனைகளை தமிழர் அமைப்புக்களுக்கும், தமிழர் அமைப்புக்களின் யோசனைகளை இலங்கை அரசுக்கும் பரிமாற்றம் செய்வதில் தான் இந்திய அரசு தற் சமயம் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலைப்பாடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவாது.

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் வெற்றிகரமாக முடிவடைய வேண்டுமானால், இந்தியா தனது இன்றைய நிலைப்பாட்டை மாற்றியாக வேண்டும்.

சொந்தமாக இந்தியா யோசனைகளைத் தயாரித்து இரு தரப்பினருக்கும் சமர்ப்பிக்க வேண்டும். இந்தியா சமர்ப்பிக்கும் யோசனைகளை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

வடபகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் சிவில் நிர்வாகத்தை நடத்துகின்றனர் என்று கூறிக் கொண்டு எரி பொருள் தடையைக் கொண்டு வருவது போன்ற நடவடிக்கைகள் தீர்வுக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும்.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (அ-எ)

மண்மூடை ---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

காரைநகர் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருக்கும் மண்மூடை பாதுகாப்பு அரணுக்குள் பதுங்கிக்கொண்டேன்.

தொடர்ந்தும் பத்து நிமிடங்களாக ஷெல் குண்டுகள் விழுந்தபடி இருந்தன.

நான் பயத்தினால் வெளியேவரவில்லை.

பின்னர் அனைத்தும் ஓய்ந்து விட்டன என எண்ணி மண்மூடை பாதுகாப்பு அரணை விட்டு வெளியேறினேன்.

திடீரென புகையைக் கக்கிக்கொண்டு வந்த ஷெல் ஒன்று மீண்டும் பஸ் நிலையத்தில் விழுந்து வெடித்தது

இதன் காரணமாக எனக்குக் காயங்கள் ஏற்பட்டன.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

பஸ் மிதிபலகையில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் சென்று கொண்டிருந்த பொழுது 50 யார் தூரம் தள்ளி பெரும் புகையுடன் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது.

அதன் சிதறல்கள் மிதிபலகையில் நின்ற என்னையும் ஏனையோரையும் தாக்கின.

பஸ் உடனடியாக நிறுத்தப்பட்டு பயணிகள் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

கூரையைத்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக் குறித்துப் பிள்ளைகளுடன் பேசிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது எமது வீட்டில் மேற்பகுதியால் [illegible] ஹெலிக் கொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டது.

வீட்டின் கூரையையும் துளைத்து வந்த குண்டு ஒன்று எனது நாடியைப் பதம் பார்த்தது இப்படி அவர் கூறினார். (இ-10)

அனலைதீவுக்கு படகுச் சேவை

யாழ் அரச அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், ஜன 8 அனலைதீவுக்கான அரச படகுச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உறுதி அளித்தார்.

அனலைதீவு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் சார்பில் திரு. ஐ. செல்லையா நேற்று அரச அதிபரைச் சந்தித்து அரச படகுச் சேவை ஒன்றை அனலைதீவு மக்களின் நன்மை கருதி ஆரம்பிக்கும் படி கேட்டுக்கொண்டார்.

அனலைதீவுக்கு சேவை நடத்தி வந்த அலையரசி படகு இயந்திரங்கள் பழுதடைந்தமையால்சேவையாற்ற முடியாமல் உள்ளது

நல்ல நிலையில் உள்ள வேறு படகு ஒன்றின் இயந்திரங்களைப் பாவித்து அலையரசி படகுச் சேவையை நடத்தலாம்-

இப்படி கூறும் அனலைதீவு கிராம முன்னேற்றச் சங்கத்தின் அறிக்கையும் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (இ-எ)

யாழ்...

(1-பக்கத் தொடர்ச்சி)

முறையிட்டனர்.

பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் ஈ. எஸ் பரராஜசிங்கம் ஏ. எஸ். பி. யிடம் தொடர்பு கொண்டார்.

அதன்பின்னர் அனைத்து லொறிகளிலும் வந்த மோட்டார் சைக்கிள்கள் இறக்கப்பட்டு ஒரு லொறியில் ஏற்றப்பட்டு கொழும்புக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன. (இ-10)

இந்தியர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இலங்கை இனப்பிரச்சினைபற்றிய பிந்திய நிலையை விவரித்தார் என்பது தெரிந்ததே.

எரிபொருள்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லியா, கனடா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா உட்பட சோஷலிச நாடுகளின் தூதர்கள் ஜனதிபதியைத் தனித்தனியே சந்தித்து இக்கோரிக்கையை விடுத்தனர் என்று கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது (இஎ)-

வடபகுதி....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாயகர் சம்மதித்தார்.

'வட பகுதி நிலைமை நாட்டின்சுதந்திரத்துக்கு சவால் விடுவதாக அமைந்துள்ளது. கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்று திரு. அனுரா பண்டாரநாயக்கா அப்போது கூறியிருந்தார். (இ-எ)

நீத்தார் பட்டியல்

திருமதி இராமமூர்த்தி மங்களம்மாள்

காலம் சென்ற புல்லாங்குழல் வித்துவான் பிரம்மஸ்ரீ இ. மூர்த்தி ஐயர் அவர்களின் அன்பு மனைவியும் சீதாலெட்சுமி (இந்தியா) காலம் சென்ற ராமதாஸ், நாகலெட்சுமி, விசாலாட்சி, ராமநாதன், ஜெயராம், சம்பூரணம், ஜானகி, கணேசகுரு, ஆகியோரின் அன்புத்தாயாரும் கிருஷ்ணமூர்த்தி (இந்தியா) சுந்தரம், சாம்பசிவம், கௌரிசங்கர்,லெட்சுமி,ஸ்ரீகரி. ஜெ.லெக்ஷ்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆகிய திருமதி இராமமூர்த்தி மங்களம்மாள் இன்று (7-1-87) காலமாகி விட்டார்.

மரண அறிவித்தலை உற்றாரும் உறவினரும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

மரணச்சடங்கு 8-1-87 வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் கொழும்புத்துறை துண்டி மயானத்தில் நடைபெறும்.

92, கொழும்புத்துறை றோட்,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
R. ஜெயராம்

சூசைப்பிள்ளை மேரிப்பிள்ளை

சூசைப்பிள்ளை மேரிப்பிள்ளை 06-01-87ல் காலமாகிவிட்டார்.

இவர் சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசம்மா, தம்பிராசாவின் அன்புச் சகோதரியும் செல்லமணி, ஞானம், ராசாத்தி, றெஜினா, தேவி(பிரான்ஸ்).லீலா (பிரான்ஸ்), அன்ரன் (பிரான்ஸ்), காமலீற்று (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராசா, அரியராசா, அல்போன்ஸ் (கொழும்பு)யோகராசா(பிரான்ஸ்),கைலேஸ்வரன் (பிரான்ஸ்), அசுந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 11.1.87 அச்சுவேலி சூசையப்பர் சேமக்காலையில் 8 00 மணிக்கு அடக்கம் செய்யப்படும்.

அச்சுவேலி

ஞா. இம்மானுவல்